**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி, B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ.)

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் புதன் கிழமை**

**முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.51/2025**

(CNR.No. TNTJ 270024052025)

------------

அரசுக்காக,

காவல் ஆய்வாளர்,

திருவிடைமருதூர் காவல் நிலையம்,

குற்ற எண். 736/2024. ...குற்றமுறையிடுபவர்

/எதிர்/

மாரியப்பன், வயது 33/2024,

த/பெ. மதியழகன்,

33 வடக்கு எடத்தெரு, திருவிடைமருதூர் தாலுக்கா. ...எதிரி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் 26/08/2025 அன்று முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.51/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில், கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்களும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.J.மணிகண்டன்,B.Com.,B.L.,** அவர்கள் ஆஜராகியும், ஆவணங்கள் பரிசீலனைக்குப் பின்னர், இன்று இந்நீதிமன்றத்தால் அவையறிய பிறப்பிக்கப்படும்....

**<u>உத்தரவு</u>**

கடந்த 09/10/2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் எதிரி மாரியப்பன் என்பவர் திருவிடைமருதூர், வேப்பத்தூர், கல்யாணபுரம், காவேரி ஆற்று பாலம் ஆஞ்சநேயர் கோவில் எதிரில் வீட்டு உபயோகத்திற்கும், விவசாயத்திற்கும் பயன்படுத்தப்படாத ஒரு நீளமான அருவாளை கையில் வைத்துக் கொண்டு "டேய் இந்த ஊர்ல நான் தான்டா பெரிய ரவுடி

மாரியப்பன்னு என் பெயரை கேட்டாலே ஊரே நடுங்கும்", என்று மிரட்டிக்கொண்டிருந்ததை பார்த்து, அந்த வழியாக வந்த பொதுமக்கள் உயிருக்கு பயந்து நாலாபுரமும் சிதறி ஓடியும், அதைப் பார்த்து கேட்ட பட்டியல் சாட்சி-1 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஆதிகேசவன் என்பவரை அவரது பணியை செய்யவிடாமல் தடுத்தும், "குச்சிகாரி மொவனே என்னையா பிடிக்க வர்ற நான் பெரிய ரவுடிடா கிட்ட வந்தா இந்த வீச்சு அருவாளாலே வெட்டிக் கொன்றுவிடுவேன்" என கொலை மிரட்டல் விடுத்தும், எதிரி பட்டியல் சாட்சி-1 க்கும், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏந்படுத்தும் வகையில் அருவாளுடன் நின்று பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் மிரட்டி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 132, 351(3)BNS r/w 25(1-A) Arms act-ன் கீழ் திருவிடைமருதூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும், அரசு தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், பிரிவு 230BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரி மீதான பிரிவுகள் 25(1-A) Arms act-ன் கீழான குற்றச்சாட்டானது மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத் தக்கது என்பதால், இவ்வழக்கை உரிய விசாரணைக்காக மாண்புமிகு தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு பிரிவு 232(அ) BNSS-ன் கீழ் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

4) இவ்வழக்கின் எதிரி 09/10/2024 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, மாண்புமிகு மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.18225/2024-ல் 23/10/2024-ம் தேதியிட்ட உத்தரவின் படி 24/10/2024 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். வழக்கு விசாரணையின் போதும், வழக்கு முடிவடையும் வரையிலும் எதிரி தொடர்ந்து பிணையில் இருந்து வர பிரிவு 232(ஆ) BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

5) இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சமர்பிக்க பிரிவு 232(இ) BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

6) அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு இவ்வழக்கு மேல்விசாரணைக்காக அனுப்பப்பட்டதென்று பிரிவு 232(ஈ) BNSS-ன் கீழ் தகவல் தெரிவிக்க உத்தரவிடப்பட்டது.

7) எதிரி வழக்கறிஞர் வைத்துக்கொள்ள வசதி உண்டு என்று கூறியுள்ளார்.

8) எதிரி 09/04/2026 -ம் தேதியன்று மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூரில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

சுருக்கெழுத்து தட்டச்சரிடம் என்னால் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாள் புதன் கிழமை அவையறிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஒப்பம் (P.ரெங்கேஸ்வரி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)